பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 21 | செவ்வாய்க்கிழமை | 06.08.2024 | கதிர் 272

# உயர் நீதிமன்ற கட்டளையை ஏற்று அதன்படி செயற்படுக

## சபாநாயகருக்குச் சட்ட மா அதிபர் அறிவுரை

பொலிஸ்மாஅதிபர்தொடர்பில்உயர் நீதிமன்றம் வழங்கிய கட்டளைக்கு அமைய செயற்படுமாறு சட்ட மாஅதிபர், சபாநாயகர் மஹிந்த யாப்பாஅபேவர்தனவிற்குஆலோசனை வழங்கியுள்ளார்.

சட்டமாஅதிபரின்ஆலோசனைகோரி சபாநாயகர்மஹிந்த யாப்பா அபேவர்தனவினால்அனுப்பப்பட்டகடிதத்திற்கு பதிலளிக்கும்வகையில்சட்டமாஅதிபர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.

இந்த விடயம் குறித்து செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கப் பெற்றுள்ளதாக சபாநாயகரும் உறுதிப்படுத்தியுள்ளார்.

சபாநாயகரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய நீண்ட ஆலோசனை அறிக்கையை வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளதாக சட்டமா அதிபர்திணைக்களம்தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொலிஸ் மா அதிபர் தொடர்பில்எழுந்துள்ளபிரச்சினை ☞ 2

# இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக்கட்சியை வழிக்குக் கொண்டு வருவோம் என்று வீரவசனம் பேசிக்கொண்டு தமிழ் பொது வேட்பாளர் விடயத்தைக் கையில் எடுத்தவர்கள் இன்று பொது வேட்பாளருக்காகத் தமிழ் அரசுக் கட்சியிடமே கையேந்தி நிற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளமையை துன்பியல்என்பதா? அரசியல்தோல்வி என்பதா? அரசியல் அறிவிலித்தனம் (அரசறிவியல்!!) என்பதா என்று தெரியவில்லை. ஆனால் தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பின் தமிழ் பொது வேட்பாளர் முயற்சி இன்ற அந்தக் கட்டத்தில்தான் நிற்கின்றது.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் சார்பில் நிறுத்தப்படவுள்ளபொதுவேட்பாளரை தெரிவு செய்வதற்காக நேற்று யாழ்ப்பாணத்தில் கூடிய அதன் நிறைவேற்றுச் சபையால் 4 மணி நேரங்களைச் செலவிட்டும் எந்தவொரு முடிவையும் எடுக்கமுடியவில்லை. நேற்றைய கூட்டத்திற்கு நான் நேற்றே சொன்ன மாதிரி சித்தார்த்தன் வரவில்லை. ஆனால், செல்வம் வந்திருந்தார். கூடவே முதல் சுரேந்திரனையும் ☞ 2

## இஸ்ரேலில் உள்ள
# இலங்கையர்களுக்கு பாதிப்பு ஏதுமில்லை

இஸ்ரேலில் தற்போது நிலவும் பதற்றமான சூழ்நிலையால் அங்குள்ள இலங்கையர் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையென, இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் வடபகுதியை இலக்கு வைத்துஹமாஸ்மற்றும்ஹிஸ்புல்லாஹ் அமைப்புகள்வான்வழித்தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றன. எனினும் இந்தத் தாக்குதல்கள் தானியங்கி வான் பாதுகாப்பு அமைப்பினூடாக முறியடிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலில் உள்ள 70 சதவீதமான இலங்கையர் பராமரிப் பாளர்களாக உள்ளனர். அவர்கள் வீடுகளுக்குள்ளேயே இருப்பதனால் பாதுகாப்பாக இருக்கின்றனர் என்றும் இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

# தேர்தலைக் கண்காணிக்கிறது மனித உரிமைகள் ஆணைக்குழு

ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெறும் முறைகேடுகளை கண்காணிக்கவும் அது குறித்த தகவல்களை பெறுவதற்கும் நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ☞ 2

# கிரிக்கெட் வீரர் திலகரத்ன ஐ. ம. சக்தியில் இணைவு

இலங்கை கிரிக்கட் அணியின் முன்னாள் வீரர்ஹஷான்திலகரத்ன ஐக்கியமக்கள்சக்தியுடன் இணைந்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட வீரர்களில் ஒருவரான ஹஷான் திலகரத்ன எதிர்க்கட்சித் ☞ 8

## தமிழ் பொது வேட்பாளர் விவகாரம்
# ரெலோவுக்குள் தெறிப்பு வினோ எம்பி தனி வழி

தமிழ் பொதுவேட்பாளருக்கு ரெலோ ஆதரவு வழங்கினாலும் தான் ஆதரவளிக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகாதலிங்கம் தெரிவித்தார். வன்னி மக்களின் மனங்களை அறிந்தே இந்த முடிவைத் தான் எடுத்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் தங்கள் நிலைபாடு என்ன என்று செய்தியாளர் ஒருவர் நேற்று எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரெலோ தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றது. ஆனால் அதற்கு நான் உடன்பாடில்லை. அது ஒரு விசப் பரீட்சை. நான் வன்னி மக்களின் கருத்துகளை கேட்டறிந்துள்ளேன். அவர்களது நிலைப்பாடுதான் எனது நிலைப்பாடும். பொது வேட்பாளருக்கு வன்னியில் ஆதரவு இல்லை.

பொதுவேட்பாளர் என்ற ஒன்று வெல்லப் போவதில்லை. சமஸ்டி உள்ளிட்ட தமிழ் மக்களின் அபிலாசைகளை ☞ 2

# புகைச் சான்றிதழ் வழங்கும் இடங்களிலேயே காப்புறுதி, வரி அனுமதிப் பத்திரம் பெற ஏற்பாடு

## இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

வாகனப் புகைச் சான்றிதழ் பெறும் இடங்களில் இருந்தே காப்புறுதி மற்றும் வரி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்ற செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

போக்குவரத்துத் துறையினால் சுற்றுச் சூழல்கட்டமைப்புக்குபல சேதங்கள்ஏற்படுகின்றன. அவற்றில்வாகனங்களில் இருந்து வெளிப்படும் புகை பிரதானமானது. இதற்கு தீர்வாக, புகைப் பரிசோதனைச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. அதன்படி, நாட்டின் வளிமண்டலத் தரத்தை நல்ல நிலையில் பராமரிக்கமுடிந்துள்ளது.

போக்குவரத்து அமைச்சு, கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மத்திய சுற்றுச் சூழல் ஆணைக்குழு ஆகியவை இணைந்து அடுத்த 6 மாதங்களுக்குள் வளி மாசடைவதை அளவிடும் நிலையங்களின் எண்ணிக்கையை ☞ 2

# விலகியோர் திரும்பி வருவதற்கு கட்சிக் கதவுகள் திறந்தேயுள்ளன

## பொது ஜன பெரமுன அறிவிப்பு

கட்சிக்கு மீண்டும் திரும்பும் எவருக்கும் கட்சியின் கதவு திறந்தே இருக்கும் என, பொது ஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்றஉறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்சி ஆதரவாளர்களின்கூட்டத்தின்பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்காபொதுஜன பெரமுனவுக்குள்மீண்டும் வர விரும்புவோருக்கு கதவுகள் திறந்தே உள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் ☞ 2

# விஜயதாச ராஜபக்சவுக்கு பின்வரிசை ஆசனமே

## நாடாளுமன்றத்தில் ஒதுக்கீடு

நீதித்துறை சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பதவியை இராஜினாமா செய்த கலாநிதி விஜயதாசராஜபக்சவுக்கு ஆளும் கட்சியின் பின்வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றதகவல்கள் தெரிவிக்கின்றன.

விஜயதாச ராஜபக்ச எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவதன் காரணமாக அமைச்சுப் பதவியை ☞ 2

# சு.கட்சியின் ஆதரவு ரணிலுக்கு மட்டுமே

## நிமல் சிறீபால டி சில்வா அணி அறிவிப்பு

ஜனாதிபதித்தேர்தலில் ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவிற்கு மட்டுமே சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கும். அது கட்சியின் உத்தியோகபூர்வமான தீர்மானம் என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி மூன்றாக உடைந்து சிதறியிருக்கும்நிலையில், அதன்ஒவ்வொருதரப்பும் ஜனாதிபதித் தேர்தலில் ஒவ்வொருவரை ஆதரிப்பதாக அறிவித்துள்ளது. நிமல் சிறீபால டி சில்வா தரப்பு ரணிலை ஆதரிப்பதாக அறிவித்தது. ஆனால் நீதிமன்றத் தீர்ப்புப்படி தானே கட்சியின் பொதுச் செயலாளர் என்று கூறும் நாடாளுமன்றஉறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தலைமையிலான அணியினர் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் ☞ 8

# பெரமுனவின் வேட்பாளர் விவரம் இன்று அறிவிப்பு

பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரை இன்று அறிவிக்கவுள்ளதாகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச நேற்றுத் தெரிவித்தார். கொழும்பில்நேற்றுசெய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு, இடையில் நேற்று பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் சந்தித்துப் பேசினார் அவர். அதன் பின்னர் செய்தியாளர்களிடமும் பேசினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கட்சியின் நிறைவேற்றுக்குழுஏகமனதாக எடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்சியின்உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குகின்றனர் என்று ☞ 8

# சமூக வலைதளங்களில் சிறுவர்கள் துஸ்பிரயோகம் குறித்து விசாரணை

## நீதி மன்றுக்கு அறிவித்தனர் பொலிஸார்

இலங்கை சிறுவர்களின் நிர்வாணப் புகைப் படங்கள்மற்றும்காணொளிகளை டுவிட்டர் கணக்குகள் ஊடாகப் பயன்படுத்திமேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விரிவான விசாரணைகளைஆரம்பித்துள்ளதாக பொலிஸார் நேற்று நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

கூட்டிவந்திருந்தார். அவர் இந்த நிறைவேற்றுச்சபையின்உறுப்பினர் அல்லர். இருந்தாலும் கூட்டத்தில் அவரும் இருந்தார். தமிழ் மக்கள் கூட்டணித்தலைவர்விக்னேஸ்வரன் கலந்துகொள்ளவில்லை. இந்தத் திட்டத்தின் மூளைகளில் ஒன்றான போராசிரியர் கணேசலிங்கத்தின் முகத்தையும்காணமுடியவில்லை.

இந்தப் பொதுக் கட்டமைப்பால், தமிழ் பொது வேட்பாளரைத் தேடிப் பிடிக்கவென உருவாக்கப்பட்ட உபகுழு பரிந்துரைத்த பெயர்களில் இருந்து ஒ-ருவரை பொது வேட்பாளராகத்தெரிந்தெடுப்பதுதான் நேற்றைய கூட்டத்தின் ஒரே நிகழ்ச்சிநிரல். தனியார்சொகுசுவிடுதி அறையில் பிற்பகல் 1 மணிக்குத் தொடங்கிய கூட்டம் மாலை 5 மணிவரை தொடர்ந்தது. ஆனால் வேட்பாளரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

உப குழு பரிந்துரைத்த விக்னேஸ்வரன், அரியநேந்திரன், தவராசா, சந்திரநேரு சந்திரகாந்தன் ஆகியோரில்ஒருவரைவேட்பாளராக இறுதிசெய்யவேண்டியதுதான்பணி. ஆனால், நேற்று நடந்து முடிந்தது என்னவோ இந்தப் பட்டியலில் இருந்துவிக்னேஸ்வரனின்பெயரை முற்றிலுமாக அடித்துவிட்டதுதான். எஞ்சியிருக்கும்மூன்றுபேரும்தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். இவர்களில் சந்திரகாந்தன் பொதுக் கட்டமைப்பினர் மற்றும் தமிழ் மக்கள் பொதுச் சபையினரின் தேசிய மாய்மால எடுப்புகளுக்கு எல்லாம் இழுபட முடியாது, நான் நானவே இருப்பேன், என்னை மாற்றிக்கொள்ளமாட்டேன், அதனை ஏற்று விரும்பினால் போட்டியிடுகின்றேன் என்கிறார். அதனால் அவரையும் கைவிடவேண்டியதாயிற்று.

எஞ்சியிருப்பவர்கள் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரனும் அந்தக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் சட்டத்தரணி தவராசாவும்தான். இதில், பொதுக் கட்டமைப்பினரும் பொதுச் சபையினரும்முன்வைக்கும்,தமிழ் பொதுவேட்பாளராகநிறுத்தப்படுபவர் அதனை பிற்காலத்தில் அரசியல் ஆதாயமாகப் பயன்படுத்தவே கூடாது என்கிற நிபந்தனையைத் தளர்த்தினால்தான் போட்டியிடுவது சாத்தியமாகலாம் என்று அரியநேந்திரன்சொல்லியிருக்கிறார் என்று தகவல். மறுபுறத்தில் சட்டத்தரணி தவராசா தான் இது குறித்து கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுடன் பேச கால அவகாசம் கேட்டிருக்கின்றார் என்று தகவல்.

ஆக மொத்தத்தில் எந்தக் கட்சியை தம்மிடம் மண்டியிட வைக்க முடியும் என்று பொதுக் கட்டமைப்பில்உள்ளவர்கள்அதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் பொதுச் சபையினர் கருத்தினார்களோ, மனப்பால் குடித்தார்களோ அந்தக் கட்சியிடமே இப்போது அவர்கள் மண்டியிடவேண்டிய நிலை. இப்போதுஇறுதிசெய்யப்பட்டிருக்கும் இருவரும் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள். ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரைஆதரிப்பது என்பதைக் கட்சி முடிவு இன்னும் முடிவு செய்யாத நிலையில் தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து தாமே அதில் போட்டியிடுவது என்று தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்-குழு உறுப்பினர்கள் முடிவெடுப்பதுகட்சிக்குள்அவர்களின் எதிர்காலத்தைநாசமாக்கிவிடும். ஏன், கட்சியைவிட்டு வெளியேற்றப்படும் ஆபத்தைக்கூட ஏற்படுத்திவிடும். அடுத்து மாகாண சபைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்று வரவுள்ள நிலையில் இப்படித் தமது அரசியல் தற்கொலைக்கு அவர்கள் தயாராக இருப்பார்களா என்பதுபெரும்கேள்விதான். என்ன செய்கிறார்கள் என்றுபொறுத்திருந்து பார்க்கலாம்.

அவர்களின்முடிவுகளைஅடுத்து நாளை புதன்கிழமை அல்லது மறுநாள் வியாழக்கிழமை தமிழ் பொதுவேட்பாளர்யார்என்பதுஇறுதி செய்யப்படும் என்று நேற்றைய கூட்டத்தில்முடிவெடுத்திருக்கிறார்கள். அரியநேந்திரனும் தவராசாவும் சறுக்கினால், ''மச்சான் பயப்படாதே, யாரும் இல்லாத நிலையில் ஆபத்தாந்தவனாக நான் கைகொடுப்பேன்'' என்று இரேனியேஸ் செல்வின் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு அளித்த வாக்குறுதிப்படி அவரையே வேட்பாளராக பொதுக் கட்டமைப்பு அறிவிக்கும் நிலையே ஏற்படும்.

என்னதான் இருந்தாலும் எங்களால் முடியும் என்று வீறாப்பாக எழுந்தவர்கள் இன்று ஏதோ ஒப்பேற்றினால் சரி என்கிற நிலைக்கு வீழ்ந்திருப்பது பரிதாபத்துக்குரியது. இந்தநிலைக்கு தங்களை ஆதரித்து எழுதாத பத்திரிகையாளர்கள்தான் காரணம் என்றுஅவர்கள்கருதுவது இன்னும் கழிவிரக்கத்துக்குரியது. நேற்றைய கூட்டத்திலும்ஒருபத்திரிகையாளரை வசைபாடுவதுடன்தான் தொடங்கியிருந்கிறார்கள். பொதுக் கட்டமைப்பின் முன் சில கேள்விகளை முன்வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டுரை எழுதியவரின் பின்னணி என்ன என்று தனக்குத் தெரியும் என்று அரசியல் கட்சித் தலைவர் ஒருவர் சொல்ல, தமிழ் குடிமைச் சமூகப் பிரதிநிதி ஒருவர் அதனை கைதட்டி வரவேற்றார் என்று சொல்லப்பட்டது. இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் "கரடிக்கு என்னவொரு ஆனந்தம்" என்கிறதருணத்தைப்போலஇருந்தது அது என்று கூறிச் சிரித்தார். தமது பின்னடைவுகளுக்கு மற்றவர்கள் மேல் பழிபோடும்வரையில் இவர்களால் உருப்படியாக எதையாவது செய்ய முடியுமா என்பதும் சந்தேகம்தான்.

ஒருபுறத்தில் இவர்கள் தமிழ் அரசுக் கட்சியின் கண்ணுக்குள் விரலைவிட்டு நோண்டி, அதன் மத்திய செயற்குழுவில் இருந்தே பொது வேட்பாளரை இழுத்தெடுக்க முயன்றுகொண்டிருக்கும்போது, மறுபுறத்தில் இவர்களுக்குள்ளேயே பிளவு வந்து தமிழ் பொது வேட்பாளர் யோசனைக்குத் தான் ஆதரவில்லை என்று ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் அறிவித்துள்ளார். வன்னி மக்கள் இந்த யோசனைக்கு ஆதரவில்லை என்பதால் தானும் ஆதரவில்லை என்று அவர் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறார். மொத்தத்தில் பெரிய ஓட்டைப் பாத்திரத்திற்குள் தண்ணீரை நிரப்பும் பகீரதப் பிரயத்தனத்தில் பொதுக் கட்டமைப்பு எப்போது வெற்றி பெறுகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உயர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து பிரதம நீதியரசருடன் கலந்துரையாடப் போவதில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பிரதம நீதியரசருடன்கலந்துரையாடுவதற்கு எவ்வித சட்ட அடிப்படைகளும் இல்லை என சபாநாயகர் கூறியுள்ளார்.

பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டதை சவாலுக்குட்படுத்தி, சிவில் தரப்பினர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர்நீதிமன்றம், அவர் பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றுவதற்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்தது.

அத்துடன் அரசியலமைப் பிற்கமைய, பதில் பொலிஸ் மாஅதிபரை நியமிக்குமாறு உயர் நீதிமன்றம் ஜனாதிபதிக்கு அறிவுறுத்தியது.

எவ்வாறாயினும், பொலிஸ் மாஅதிபர் விவகாரம் தொடர்பில் சபாநாயகரும் பிரதம நீதியரசரும் கலந்துரையாடி தீர்வு காண வேண்டும்எனஜனாதிபதிஅண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மூத்தோர் வங்கி வைப்புக்கான வட்டி வீத தீர்வு ஜனாதிபதியிடம்

## அறிக்கை கையளிப்பு

இலங்கையின் மூத்த குடிமக்களது வங்கி வைப்புத் தொகைக்கான வட்டி வீதத்தை திருத்துவதற்கான தீர்வு யோசனை அடங்கிய அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல மூத்தோரின் முக்கிய வருமானம், அவர்களின் ஓய்வு காலத்தின்போது வழங்கப்படும் பணிக்கொடை அல்லது வங்கி வைப்புத்தொகை போன்றவற்றில் பெறப்படும் நிலையான வட்டியே.

கடந்த காலங்களில் நாட்டில் வங்கி வட்டி வீதத்தை குறைக்குமாறு கடன் பெற்றவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டன. அதற்கமைய வங்கி வழங்கும் வட்டி வீதமும் குறைவடைந்துள்ளது.

கடந்த காலங்களில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டபோது அரசு குறிப்பிட்ட சதவீத வட்டியை மூத்தோருக்காக வழங்கியது. அதன்படி, ஒருபுறம், வங்கிகளுக்கு 88 பில்லியன் ரூபாய் செலுத்த வேண்டியுள்ளது. மறுபுறம், கிட்டத்தட்ட 15 லட்சம் கணக்கு வைத்திருப்பவர்கள் வட்டி விகிதம் குறைக்கப்பட்டதால் சிக்கலை எதிர்கொண்டனர். ஜனாதிபதியினால்வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி இப்பிரச்சினைக்கு திறைசேரி வழங்கக்கூடிய பதில் தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் சாதகமான பதில் வழங்கப்படும் - என்றார் அமைச்சர்.

# ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஓக. 15 முதல் தனிப் பாதுகாப்பு

அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய ஓகஸ்ட் 15 முதல் ஜனாதிபதிவேட்பாளர்களுக்குவிசேட தனிப் பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்வேட்பாளர்களினதும் முன்னாள் ஜனாதிபதிகளினதும் பிரத்தியேக பாதுகாப்புஏற்பாடுகளைமேற்பார்வை செய்வதற்காக குழுவொன்றை நியமிக்கவும் அத்தகைய சகல பாதுகாப்பு நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பதற்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிப்பதற்கும் பரிந்துரைத்து ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவினால் அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டது.

அமெரிக்காவின் பென்சில்வேனியா பிராந்தியத்தில் பட்லர் நகரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில்முன்னாள்அதிபர் டொனால்ட் டிரம்ப் தாக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு, இலங்கையில் உத்தேச ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தனிப்பட்ட பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

அதற்கமைய தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் அந்தந்த வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின்தனிப்பட்டபாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிட பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்தலைமையில்இந்தக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புப் படைகளின் பிரதானி, பொலிஸ் மா அதிபர், தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (தேர்தல்கள்) ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

# தபால் மூல வாக்களிப்பு: விண்ணப்ப காலம் நீடிப்பு

விண்ணப்பங்களை அஞ்சலிடும் போது ஏற்படும் தாமதம், ஆணைக்குழுவுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கை ஆகியவற்றை கருத்திற் கொண்டு தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும்காலவகாசம்எதிர்வரும் வெள்ளிக்கிழமை (9) வரை நீடிக்கப்பட்டுள்ளது என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வது நேற்று (திங்கட்கிழமை) நிறைவடையவிருந்த நிலையில் விண்ணப்பங்களை அஞ்சலிடும்போது ஏற்படும் தாமதம் மற்றும் ஆணைக்குழுவுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கை ஆகியவற்றை கருத்திற் கொண்டு விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் திகதி எதிர்வரும் 9 ஆம் திகதிவரைநீட்டிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதி திகதியன்று அதாவது எதிர்வரும் வெள்ளிக் கிழமை நள்ளிரவு 12 மணிக்கு முன்னர்விண்ணப்பங்கள்பொறுப்பான மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களை வந்தடைய வேண்டும்.

விண்ணப்பங்கள் கிடைக்கும் போது ஏற்படக்கூடிய தாமதங்களை தவிர்க்கும் வகையில் நாளை மறு தினம் மற்றும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (9) ஆகிய தினங்களில் பூரணப்படுத்திய தபால்மூல வாக்கு விண்ணப்பங்களைஅஞ்சலுக்குஒப்படைப்பதை தவிர்த்து ஒவ்வொரு மாவட்ட ரீதியாக அவற்றை வேறாக பிரித்து, வெள்வேறு உறைகளில் இட்டு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அலுவலகம் அமைந்துள்ள மாவட்டத்தில் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்துக்கு நேரில் சென்று ஒப்படைப்பது மிகவும் உகந்தது என்பதைதெரிவித்துக்கொள்கிறோம்.

## சமூக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியகம் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்ததுடன் அமெரிக்க அரசாங்கத்தினால் நடத்தப்படும் நிறுவனம் ஒன்று செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் உரிய விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்காக அமெரிக்க அரசாங்கத்தால் நடத்தப்படும் சம்பந்தப்பட்ட நிறுவனம் அனுப்பிய தரவுகளை ஆய்வு செய்தபோது, சிறார்களுக்கு எதிரான கடுமையான பாலியல் துஷ்பிரயோக விடயங்கள் பல தெரியவந்துள்ளதாகவும்பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளின்போது, பாரிய பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான 4 சிறுவர்கள் தொடர்பிலான தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சம்பவங்கள் தொடர்பாக சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் பிரதான பரிசோதகர் சாமந்தி ரேணுகா நீதிமன்றத்தில் உண்மைகளை அறிக்கை செய்திருந்தார்.

## விலகியோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ். எம் சந்திரசேனவுக்காக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சநிபந்தனையற்ற விதத்தில் செயற்பட்டார்.

அவர் எதிர்பார்த்த பதவியை பெற்றுக் கொடுப்பதற்காக முயற்சி செய்தார். இதனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் மன வருத்தப் படும் நிலைமையும் ஏற்பட்டது.

எமது செயற்பாடுகள் தூய்மையானவை. நாம் அவர்களுக்காக உச்ச அளவில் செயற்பட்டோம். எனினும் அவர்கள் தற்போது மேற்கொண்டுள்ள தீர்மானம் சரியானதா என்பதை அவர்கள்சிந்திக்கவேண்டும்என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தேர்தலைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக 0767914696 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அல்லது 0112505566 என்ற தொலைநகல் இலக்கத்திற்கு முறைப்பாடுகளை, சமர்ப்பிக்க முடியும்எனவும்ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நடத்தும் நோக்கில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திரமான மற்றும் நியாயமானதேர்தலைநடத்துவதற்கு பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகளுக்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அண்மையில் வழிகாட்டுதல்கள் ஒன்றை வெளியிட்டுள்ளது.

## ரெலோவுக்குள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிறுத்தி பொது வேட்பாளரை நிறுத்துகிறார்கள். ஆனால்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# 40 சதவீதமான பிள்ளைகள் பாடசாலை செல்வதில்லை

## இலங்கை ஆசிரியர் சங்க உபதலைவர் விஷாகா அபேரத்ன தகவல்

இரண்டு மூன்று பிள்ளைகள் இருக்கின்ற குடும்பங்களில் எந்தப்பிள்ளைக்கு கல்வி புகட்டுவது எனும் கேள்வி எழுகின்றது. பாடசாலை செல்லவேண்டிய வயதில் உள்ள பிள்ளைகளில் 40 வீத பிள்ளைகள் பாடசாலை செல்லமுடியாத நிலையில் இருக்கிறார்கள். பிறரிடம் உடைகளை வாங்கி அணிகின்ற 20 வீதமானவர்கள் இருக்கிறார்கள் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் விஷாகா அபேரத்ன தெரிவித்தார்.

மாளிகாவத்தை டாக்டர் சிறிசேன மைதானத்தில் இடம்பெற்ற இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய ஆசிரியர் மாநாட்டில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் விஷாகா அபேரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்றைய சமூகம் எந்த நிலையில் இருக்கின்றதென்பது பற்றிய ஒரு பொதுவான புரிந்துணர்வு எமக்கு இருக்கின்றது. ஆசிரியத்தொழிலில் அதிகமாக இருக்கின்றவர்கள் அன்புக்குரிய ஆசிரியைகளே. அவர்கள் இந்த நாட்டில் வசிக்கின்ற தாய்மார்கள் ஆவர். ஆசிரியர் என்றவகையிலும் தாய்மார் என்றவகையிலும் நாட்டில் நிலவுகின்ற பிரச்சினையை நாங்கள் அதிகமாக உணர்கிறோம்.

நாங்கள் அந்த பிரச்சினை தொடர்பில் அதிகமான கூருணர்வு கொண்டிருக்கிறோம். சமையலறையில் அடுப்பில் மூட்டப்படுகின்ற நெருப்பைவிட இதயத்தில் அதிகமான நெருப்பு எரிகின்ற தென்பதை நாங்கள் அறிவோம். வகுப்பறையில் வேதனைகளை வெளிப்படுத்திக்கொள்ளக்கூட முடியாமல் இருக்கின்ற பிள்ளைகளை நாங்கள் காண்கிறோம். சமூகவலைத்தளங்களில் இந்த பிள்ளைகளின் உணவு வேளைகள் பற்றிய தகவல்களை வெளிக்கொணர்ந்திருந்தார்கள்.

இரண்டு மூன்று பிள்ளைகள் இருக்கின்ற குடும்பங்களில் எந்தப் பிள்ளைக்கு கல்வி புகட்டுவது எனும் கேள்வி எழுகின்றது. பாடசாலை செல்லவேண்டிய வயதில் உள்ள பிள்ளைகளில் 40 வீதமானவர்கள் பாடசாலை செல்லமுடியாத நிலையில் இருக்கிறார்கள். பிறரிடம் உடைகளை வாங்கி அணிகின்ற 20மூ இருக்கிறார்கள்.

கொழும்பில் மாத்திரமல்ல தொலைதூரப்பிரதேசங்களில்கூட இந்த துன்பப்படுகின்ற ஆசிரியைகள் தமது பிள்ளைக்கு தாயாக அமைவதைவிட பாடசாலையில் அந்த பிள்ளைகளுக்கு



தாயாக அமைகிறார்கள். எமது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கட்டியழுப்ப வேண்டுமென்ற ஏகோபித்த எதிர்பார்ப்பு இருக்கின்றது. இந்த எதிர்பார்ப்பை சுமந்துகொண்டு இங்கு வந்து புதிய மறுமலர்ச்சிக்காக மேலும் ஊக்கத்துடன் செயற்படுவோமென கேட்டுக்கொள்கிறேன். – என்றார். (05)

# இரணைதீவுக் கடற்பரப்பில் 207 கிலோ கஞ்சா மீட்பு







கிளிநொச்சி இரணைதீவு

கடற்கரையில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 207 கிலோ கஞ்சாவை கடற்படையினர் மீட்டு முழங்காவில் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை சனிக்கிழமையும் 176 கிலோ கஞ்சா வலைப்பாடு கடற்பகுதியில் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05 - 113)

# திரியாய் தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் தேசிய மட்டம் தெரிவு



(எச் எம் ஹலால்தீன் )

இலங்கை பாடசாலை மெய்வல்லுனர் சங்கத்தால் ரிட்ஸ்பரி நிறுவனத்தின் அனுசரணையில் நாடு பூராக நடைபெற்று வரும் 53 ஆவது சேர் ஜோன் ராபர்ட் கனிஷ்ட மெய்வல்லுநர் சாம்பியன் ஷிப் வெற்றியை கிழக்கு மாகாணத்தில் பெற்றுக்கொண்டது.

பொலன்னறுவை மாவட்டத்தை மையமாகக்கொண்டு நடத்தப்படும் ஆரம்ப சுற்றுப் போட்டிகள் சனிக்கிழமை மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் திரியாய் தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் மூன்று தங்கப்பதக்கங்களையும் , 11 வெள்ளிப்பதக்கங்கள் மற்றும் 4 வெண்கலப்பதக்கங்களைப்பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பெண்களுக்கான போட்டிகளில் மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் திரியாய் தமிழ் மகா வித்தியாலயம் பாடசாலை மாணவிகள் 52 புள்ளிகளைப் பெற்று கிழக்கு மாகாணமட்டப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமைய சேர்த்துள்ளனர்.

இப்போட்டிநிகழ்ச்சிக்கு அழைத்துச் செல்ல அனுமதி வழங்கிய அதிபர், பிரதிஅதிபர் மற்றும் ஆசிரியர்களான எஸ்.நசீர், ஜெயந்தி, பவித்திரா ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் பாடசாலை சமூகம் சார்பாக வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.(05)

# பாலமுனை பிரதேசத்தில் குடிநீர் இணைப்பு வழங்கி வைத்தல்!



(எம். எப். றிபாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்துக்குட்பட்ட பாலமுனை பிரதேசத்தில் வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்ப தலைவர் ஒருவருக்கு கட்டட நிர்மான சங்கத்தின் அம்பாறை மாவட்ட பணிப்பாளரும், சமூக சேவையாளருமான ஐ.எல்.எம். மிஜ்வாட் குடிநீர் இணைப்பினை வழங்கி வைத்தார்.

(05)

# கிண்ணியா நத்துவதுல் அரபுக் புகாரி கல்லூரி ஐந்தாவது பட்டமளிப்பு விழா கோலாகலம்











(எச் எம் ஹலால்தீன் )

கிண்ணியா நத்துவதுல் புகாரி அரபுக் கல்லூரியின் ஐந்தாவது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் எஸ்.எம் முஜீர் (இஹ்சானி) தலைமையின் கீழ் இடம் பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஏஎல்எம் அத்தாவுள்ளாஹ், திருகோணாமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மகரூப், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உலமாக்கள், கல்விமான்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அல்ஹாபிழ், அல் ஆலிம், அல் பாழில் ஆகிய பட்டங்களை சுமார் 25பேர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

அவர்களுக்கான சிறப்பு சான்றிதழ்களும் பட்டங்களும் அதிதிகளால் வழங்கப்பட்டன. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தவறைத் திருத்துவாரா ரணில்

**காவல் மாஅதிபர் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய கட்டளைக்கு அமைய செயற்படுமாறு சட்ட மாஅதிபர், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்குஆலோசனைவழங்கியுள்ளதன் மூலம் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.**

**இந்த விவகாரத்தில் சட்ட மாஅதிபரின் ஆலோசனை கோரி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவினால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில் சட்ட மாஅதிபர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார். சட்ட மா அதிபரின்ஆலோசனைகிடைக்கப்பெற்றுள்ளதாக சபாநாயகரும் உறுதிப்படுத்தியுள்ளார்.**

**சபாநாயகரால்முன்வைக்கப்பட்டகோரிக்கைக்கு அமையநீண்டஆலோசனையைவழங்கியுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த விவகாரத்தில் நீதிமன்றத்தின் முடிவை ஏற்கப்போவதில்லை என்று சபாநாயகர் அறிவித்திருந்தார். அவர் இந்த அறிவிப்பை வெளியிடுவதற்கு முன்னர் அரசுத் தலைவருடன் ஆலோசனை கலந்திருப்பார் என்று ஐயந்திரிபுர எண்ணலாம். இருந்தாலும் பிரச்சினை தீவிரமாகி நீதித்துறையுடனான இந்த மோதல் போக்குக் குறித்துப் பல தரப்பினரிடமிருந்தும் கண்டனங்கள் வரத் தொடங்கியதும் இறங்கி வந்த அரசுத் தலைவர் இது தொடர்பில் பிரதம நீதியரசரையும் சபாநாயகரையும் நேரில் பேசி தீர்வு காணும் யோசனையை முன்வைத்தார். ஆனால், அதற்கு பிரதம நீதியரசர் மறுத்துவிட்டார் என்று தகவல்கள் வெளியாகின. அதேபோன்று தானும் பிரதம நீதியரசருடன் பேசப்போவதில்லை என்று சபாநாயகரும் அறிவித்திருந்தார்.**

**இந்த நிலைமையிலேயே நீதிமன்றத்தின் கட்டளையை ஏற்றுச்செயற்படுமாறு சட்ட மா அதிபர் ஆலோசனைதெரிவித்துள்ளார். நீதித்துறையின் மாண்பைமதிப்பிறக்கம்செய்யும்வகையில்அரசுத் தலைவரும்சபாநாயகரும்செயற்படுகின்றார்கள் என்று விமர்சனங்களும் கண்டனங்களும் எழுந்த நிலையில் வேறு வழியின்றி சரணடையும் நிலை ஆளும்தரப்பினருக்கு ஏற்பட்டுள்ளது. இது ரணில் மற்றும் அவரது கூட்டாளிகளின் மோதல்போக்கின் தவறை உணர்த்தி நிற்கின்றது. இனியாவது ரணில் திருந்தி நடப்பாரா?**

**ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடக்கவுள்ள நிலையில் சுயாதீனமான தேர்தலை உறுதிப்படுத்தவும் பாதுகாப்பை திடப்படுத்தவும் சுயாதீனமான நேர்மையான நீதித்துறை அவசியம். அதனை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் விதத்திலான செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்படவேண்டியதும் அவசியம். எனவே ரணில் தனது தவறுகளை உணர்ந்துகொண்டு இனிமேலாவது நீதித்துறையுடனான மோதல் போக்கை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். அதுவே இலங்கையின் எதிர்காலத்திற்கான சிறந்த நகர்வாக இருக்கமுடியும்.**

# திராய்க்கேணி குரூரப் படுகொலையின் 34 வது நினைவு தினம் இன்று



அம்பாறை மாவட்டத்திலே உலகறிந்த மிகவும் குரூரமான திராய்க்கேணி படுகொலைச் சம்பவம் இடம்பெற்று இன்றுடன் 34 வருடங்களாகின்றன.

1990 ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி இடம்பெற்ற திராய்க்கேணி படுகொலை சம்பவத்தின் 34வது வருடநினைவுதினம் இன்று (06.08.2024) ஆகும்.

சுற்றிவளைப்பின்போது திராய்க்கேணி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் 54 தமிழ் மக்கள் பால் வயது வித்தியாசமின்றி வெட்டியும் கொத்தியும் படுகொலை செய்யப்பட்டார்கள்.

மனிதாபிமானம் என்றால் என்ன விலை என்று கூறுமளற்கு 1990 காலகட்டத்தில் வகை தொகையின்றி தமிழ் மக்கள் சுட்டும் வெட்டியும் கொலைசெய்யப்பட்டார்கள். இன்னும்அவற்றுக்குநீதி



கிடைக்கவில்லைஎன்பது அவர்களது ஆதங்கமாகும்.

இச் சம்பவம் பற்றி அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கூறுகையில்...

இலங்கை நாட்டிலே சுதந்திரத்திற்கு பின்பு திட்டமிட்டவகையில் 1956 ,1985 ,1990,2009 வரை தமிழ் மக்கள் திட்டமிடப்பட்டு படுகொலை செய்யப்பட்டு வந்திருக்கின்றார்கள்.

ஆனால் இதுவரை அப் படுகொலைகளுக்கு நீதியோ, நஷ்ட ஈடோ கிடைக்கவில்லை .

எந்த இனமாக இருந்தாலும் ஆலயம் என்பது புனிதஸ்தலமாக இருக்கும். ஆனால் துரதிஷ்டவசமாக இலங்கையில் இந்து ஆலயத்தில் தான் அதிகமான படுகொலைகள் இடம் பெற்று இருக்கின்றன. அரசாங்கமே ராணுவத்தையும், ஊர்காவல் படையினரையும் பயன்படுத்தி இந்த திட்டமிட்ட படுகொலையை செய்தது .



அம்பாறை மாவட்டத்தில் திராய்க்கேணி மட்டும் அல்ல உடும்பன் குளத்திலே 151 விவசாயிகள் சுற்றி வளைக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதேபோன்று சொறிக்கல்முனையில் பங்குத்தந்தை செல்வராஜா பாதர் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட கிறிஸ்தவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். வீரமுனையிலும் ஆலயத்தில் வைத்து நூற்றுக்கணக்கான அப்பாவி தமிழர்கள் சுட்டுக்



கொல்லப்பட்டார்கள்.

இந்த வரலாற்றை எல்லாம் நாங்கள் அடுத்த சந்ததிக்கு எடுத்துசெல்ல வேண்டும். சமகால சந்ததியினர்சுதந்திரமாகநிம்மதியாகவாழவேண்டும்.

மற்றுமொரு தமிழ் பற்றாளர் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கூறுகையில்..

அம்பாறைமாவட்டத்திலே58தமிழ்கிராமங்களை இலக்கு வைத்து இன அழிப்பு நடத்தப்பட்டது. ஆலங்குளம், மீனோடைக்கட்டு போன்ற கிராமங்கள் ஒரு தமிழர்களும் இல்லாமல் முற்றாக கபளீகரம் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் இராணுவமும் முஸ்லிம் ஊர்காவல் படையினர் இனவாதிகள் இணைந்து செய்தார்கள் என்பது மாற்றுக் கருத்துக்களுக்கு இட இல்லை.

.எமது அடையாளத்தை நாங்கள் பேண வேண்டுமாக இருந்தால் அரசியல் ரீதியான தீர்வு கிடைக்க வேண்டுமாக இருந்தால் நாங்கள் தொடர்ச்சியாக அமைதிவழி அறவழிப்போராட்டத்தில் ஈடுபட வேண்டும். அதைத்தான் எமது கட்சியும் செய்து கொண்டிருக்கிறது. என்றார்.

படுகொலை சம்பவத்தில் கணவர்மாரை இழந்து விதவைகளானோர் 40 பேராவர்.

கண்முன்னே சம்பவத்தை பார்த்து இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இரண்டு தாய்மார்களான அன்னம்மா, மாரிமுத்து மற்றும் கிராம தலைவர் சி.கார்த்திகேசு ஆகியோர் அழுது அழுதழுது கதைகூறினார்கள்.

இவர்களுக்குநீதிகிடைக்குமா?நஷ்டஈடாவது கிடைக்குமா? என்று சர்வதேசமும் 34 வருடங்கள் காத்திருக்கிறது.

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா**
**காரைதீவு நிருபர்**

# தமிழ் மக்கள் விடுதலை புலிகளின் அம்பாறை மாவட்ட எழுச்சி மாநாடு











(பாறுக் ஷிஹான்)

தமிழ் மக்கள் விடுதலை புலிகளின் 2024 அம்பாறை மாவட்ட எழுச்சி மாநாடு சனிக்கிழமை காலை முதல் மாலை வரை காரைதீவு கலாசார மண்டபத்தில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பிரதிச்செயலாளர் கட்சியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் யோகராஜா சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது முதலில் வாகன ஊர்வலம் நடைபெற்று தேசிய கொடி, மாகாண கொடி, கட்சி கொடிகள் அதிதிகளால் ஏற்றப்பட்டன.

தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) கலந்து சிறப்பித்தார்.

அடுத்து அகவணக்கம் தமிழ் மொழி வாழ்த்து வரவேற்புரை வரவேற்பு நடனம் தலைமையுரைதலைவர்பணிக்குழுஅறிமுகம் கட்சிக்காக பணி செய்தவர்களுக்கான நியமனம் (சான்றிதழ்) வழங்குதல் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றன.

மேலும் நிகழ்வில் கொள்கை பிரகடனம் வாசித்தல்,தமிழ்மக்கள்விடுதலைப்புலிகள்கட்சியின் அரசியல் துறை செயலாளர் மா.இராஜேந்திரன்(சின்னா மாஸ்டர்) மேற்கொண்டதுடன் கொள்கை அறிக்கை வெளியீட்டையும் மேற்கொண்டிருந்தார்.தொடர்ந்து கட்சியின் பிரதம பொருளாளர் ஆ.தேவராசா கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரின் பிரத்தியேக செயலாளரும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தேசிய அமைப்பாளருமான தம்பிராஜா தஜிவரன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.(05)

# ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் நாட்டின் ஜனாதிபதியாக இருப்பார்

## ஐ.தே.க. அமைப்பாளர் ஆதம்லெவ்வை நம்பிக்கை





(எம்.எப்.றிபாஸ்)

அடுத்த முறையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தான் என்பதை பொத்துவில் தொகுதியின் ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளர் யூ.கே ஆதம்லெவ்வை தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஐ. தே. கட்சியின் வலயக் காரியாலயம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அமைப்பாளர் தனது உரையில் -

பொருளாதாரத்தில் வீழ்ந்து கிடந்த நாட்டை குறுகிய காலத்துக்குள் மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்காவால்தான் இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

நாடு சிக்கலில் மாட்டிக் கொண்ட போது, அதனைப் பொறுப்பெடுப்பதற்கு அச்சப்பட்டு விலகியோடிய அரசியல்வாதிகளுக்கு, ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவைப்பற்றிவிமர்சிப்பதற்கு எந்தவிதத் தகுதிகளும் கிடையாது. தனது வீடு தீக்கிரையாக்கப்பட்ட போதும் , மக்களுக்காக அர்ப்பணிப்போடு பணியாற்றியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை இந்நாட்டு மக்கள் எல்லோருக்கும் தெரிந்த விடயம். எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# வவுனியாவில் யானை தாக்கி ஒருவர் இறப்பு

வவுனியா வடக்கு, கற்குளம், பட்டறை பிரிந்தகுளம் பகுதியில் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார் என நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வடக்கு கற்குளம் பட்டறை பிரிந்தகுளம் பகுதியில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவர் நீண்ட நேரமாகியும் மகன் வீடு திரும்பாமையால் இரவு 10.30 மணியளவில் மகனை தேடி கிராம வீதியூடாக சென்றபோது வீதியில் நின்ற யானை தாக்கியதில் அவர் மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்தவர் பட்டறை பிரிந்தகுளம் பகுதியை சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான 58 வயதுடைய இராசையா நாகராசா என்பவராவார்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை நெடுங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05-100)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நல்லொழுக்கம் உடைய தலைவரை தெரிவுசெய்யும் நேரம் வருகிறது

## எஸ்.எம். சபீஸ் தெரிவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

எமது வாக்கு நமது உரிமை என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது. ஆனால் இம்முறை வருகின்ற தேர்தலில் எமது வாக்குரிமையை நமது கடமையாக நினைத்து வாக்களிக்க வேண்டிய நேரம் வருகின்றது. என்று அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், கிழக்கின் கேடயத்தின் தலைவருமான எஸ்.எம் சபீஸ் ஆங்கில செய்தி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்

அந்த செவ்வியில் அவர் தெரிவித்தவை வருமாறு -

தலைவன் சரியில்லை என்றால் அந்த சமூகமும் நாடும் சீரழிந்து விடும் என்பதற்கு எமது நாடு உலகிற்கு சிறந்த உதாரணமாகும். அதனால் சிறந்த சிந்தனையால் மக்களை சிறப்பாக வாழ வைக்கக்கூடிய நல்லொழுக்கம் உடைய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான உரிய நேரம் நெருங்கி வந்துள்ளது. அத்தோடு தனக்கு வாக்களித்த மக்களை மறந்து நாட்டை சூறையாடிய அரசியல்வாதிகளை சமூகத்தில் இருந்து ஒதுக்குவதற்குரிய நேரம் நெருங்குகிறது என எஸ்.எம் சபீஸ் தெரிவித்துள்ளதுடன் எமது சந்ததிகளின் எதிர்காலத்துக்காக கடமை உணர்வுடன் மக்கள் வாக்களிக்க தயாராக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். (05)

# எழுத்தாளனின் முக்கிய கடமையே சமூக சிந்தனையை மேம்படுத்தலே

## பிரிஸ்பேர்ன் நூல் வெளியீட்டில் ஐங்கரன் விக்கினேஸ்வரா உரை



பிரிஸ்பேர்னில் உள்ள மவுண்ட் ஒமாணி நூலக மண்டபத்தில் ஓகஸ்ட் நாலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்களின் வெளியீடு சிறப்புற நடைபெற்றது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர் 'தாமரைச் செல்வி திருமதி ரதிதேவி கந்தசாமி ஆற்றினார். அத்துடன் தமிழ் வாழ்த்துப் பாடலை பிரிஸ்பேர்ன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் சிறப்புறப் பாடினர்.

இந்நிகழ்வின் தலைமையுரையை ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் மூத்த செயற்பாட்டாளர் செந்தில்குமரன் ஆற்றினார். பின்னர் பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை இலக்கிய ஆர்வலர் சிவா கைலாசம் நிகழ்த்தினார்.

அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை டாக்டர் துஷ்யந்தன் திசைநாயகம் ஆற்றினார். இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை ரஜினிகாந்த் ஜெயராமன் தமிழக இலக்கிய ஆர்வலராக இருப்பினும், ஈழத்து ஊடகவியலைப் பற்றி சிறப்புற உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வை பிரிஸ்பேர்ன் சுதா சிறப்புற தொகுத்து அளித்தார்.

ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் நடைபெற்ற இந்நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கில் பெருந்திரளான பிரிஸ்பேர்ன் வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்தினார். தமிழின் பெருமையை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கடமை நமக்கு உள்ளது, என்று எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வரா குறிப்பிட்டார்.

இந்த நூல் வெளியீட்டு விழாவின் ஏற்புரையில் அவர் பேசுகையில் கூறியவை வருமாறு -

புத்தகம் வாசிப்பு என்பது மிக முக்கியம் ஆகும். புத்தகங்கள் நம்மை சரியான திசையில் அழைத்து செல்லும். படிக்க, படிக்க சிந்தனைகள் விரிவாகும். புத்தகம் படிப்பதனால் நமது எதிர்கால தலைமுறையினர் சரியான திசையில் அழைத்து செல்லப்படுவார்கள் என நம்பலாம்.

எழுத்தாளர்களின் எழுத்துக்கள் சமூக சிந்தனையை மேம்படுத்துகிறது. அத்துடன் சமூக மக்களின் நலனுக்காக எழுத்தாளர்கள் எழுத வேண்டிய கடமையும் உள்ளது, என்று எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வரா குறிப்பிட்டார்.

புலம்பெயர் மண்ணில் தமிழை மீட்டெடுக்க வேண்டிய கால கட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். நமது மொழி, கலாசாரம் அழிந்து போய் விடக்கூடாது. அதற்கு எழுத்தாளர்களின் பங்களிப்பு அவசியம்.

நமது ஈழத்து இலக்கியம், கருத்தாளமிக்க படைப்புக்கள் தமிழின் பெருமையை வெளிக்காட்டுகின்றன. அவற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கடமை நமக்கு உள்ளது என இந்நிகழ்வில் எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வரா பேசினார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## ரெலோவுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் குறைந்த வாக்குகளைப் பெறுகின்றபோது மக்களது அபிலாசைகளுக்கு தமிழ் மக்களது அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற ஒரு தோற்றப்பாடு ஏற்படும்.

என்னைப்பொறுத்தவரை தமிழ் அரசுக் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னனி போன்ற தமிழ் தேசிய கட்சிகளும் இந்த கூட்டணியுடன் இணைந்து அனைத்து தமிழ் தேசியக் கட்சிகளும் பொது வேட்பாளரை நிறுத்தி செயற்பட்டால் அதற்கு எனது ஆதரவு உண்டு. அப்போதுதான் மக்கள் அதனை ஆதரிப்பார்கள்.

ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னனி பகிஸ்கரிக்கிறது. தமிழரசுக் கட்சி பொது வேட்பாளருக்கு ஆதரவு இல்லை. இதனால் தமிழ் வாக்குகள் சிதறும். சொற்பவாக்குகளையே பொது வேட்பாளர் பெறுவார். இது பாதிப்பை ஏற்படுத்தும்.

பொது வேட்பாளர் தெரிவில் 7 கட்சிகளும் 7 பொது அமைப்புக்களும் இருக்கின்றன. ஆனால் அந்த கட்சிகளிடமோ அல்லது அந்த அமைப்புக்களிடமோ பொது வேட்பாளராக போடுவதற்கு ஆட்கள் இல்லை.

பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்காத தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களான சட்டத்தரணி கே.வி.தவராசா மற்றும் அக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ப.அரியநேந்திரன் ஆகியோரில் ஒருவரது பெயரை பரிசீலிக்கிறார்கள். அவர்களிடம் வேட்பாளர் இல்லாது பொது வேட்பாளரை எதிர்க்கும் கட்சியிடம் வேட்பாளரை தேடும் நிலை என்றால் சிந்திக்கவேண்டும் - என்றார்.

## கிரிக்கெட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சஜித் பிரேமதாசவின் நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

ஹஷான் திலகரத்ன பங்களாதேஷ் கிரிக்கெட் மகளிர் அணியின் பயிற்றுவிப்பாளர்களாகவும் தற்போது அவர் கடமையாற்றி வருகிறார்.

அவரது பாரியாரும், இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் ஏற்பாட்டாளராகவும் கடமையாற்றி வருபவருமான அப்சாரி சிங்கபாகு திலகரத்னவும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

## பெரமுனவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடுகிறார்கள். நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு ஆதரவு வழங்கிவிட்டு மக்கள் மத்தியில் பொய்யாக விமர்சிப்பது பயனற்றது.

பொது ஜன பெரமுனவைவிட்டுச் சென்றுள்ளவர்கள் மீண்டும் எம்முடன் ஒன்றிணைவார்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 'சலூன் கதவு' திறந்துள்ளது என்று குறிப்பிடுவார். ஆகவே விலகிச் செல்பவர்களை பலவந்தமாக தடுத்து வைக்க முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் கட்சிகளை பிளவுபடுத்துவதில் திறமையானவர். கொள்கைகளை முன்னிலைப்படுத்தி கட்சியுடன் பேச்சு நடத்தாமல், தனிப்பட்ட முறையில் கட்சியின் உறுப்பினர்களுடன் பேச்சு நடத்திக் கட்சிகளைப் பிளவுபடுத்துவது ஜனாதிபதியின் செயற்பாடாகும்.

ஜனாதிபதிக்கும் எமக்கும் இடையில் எவ்வித 'டீல்' அரசியலும் கிடையாது. கட்சியின் கொள்கைக்கு அமைய நாங்கள் தீர்மானம் எடுத்தோம். கட்சியின் உறுப்பினரல்லாத ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவது சாத்தியமற்றது. எமது ஜனாதிபதி வேட்பாளரை நாளை (இன்று) அறிவிப்போம் - என்றார்.

## புகைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நூறாக உயர்த்த தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளன. இந்தத் தரவுகள் அனைத்தையும் ஒரே இடத்திற்குக் கொண்டு வருவதற்கும், உலகில் எங்கிருந்தும் எந்தவொரு குடிமகனுக்கும் புகை உமிழ்வு நிலைமைகளை ஒன்லைனில் நேரடியாகப் பார்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வாகனபுகைஉமிழ்வுசான்றிதழ் பெற்ற பின்னர் அதே இடத்தில் இருந்து காப்புறுதி மற்றும் வாகன அனுமதிப்பத்திரம் பெற தேவையான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அடுத்த இரண்டு மாதங்களுக்குள் நாடளாவிய ரீதியில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

வீதி விபத்துகளைக் குறைக்கும் வகையில், பொலிஸாரினால் வழங்கப்படும் புள்ளிவழங்கும் முறைமைக்குத் தேவையான தரவுக் கட்டமைப்பு மற்றும் பொலிஸாருக்கு வழங்க வேண்டிய உபகரணங்கள் பெறுவதற்கான கேள்விமனு கோரும் பணி இறுதிக் கட்டத்தில் உள்ளன. அடுத்த மாதத்திற்குள் பொருத்தமான நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

சாரதிகளினால் மேற்கொள்ளப்படும் தவறுகளுக்கு அமைய புள்ளிகளை குறைக்க இருப்பதோடு அதனை நடைமுறைப்படுத்த முன்னர் செப்டம்பர் முதலாம் திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு அறிவூட்டல் வாட்ஸ்அப் செய்திகள் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களின் பின்னர் இது தொடர்பான சட்டம் செயற்படுத்தப்படும் - என்றார்.

## சு.கட்சியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாஸவையே தாம் ஆதரிக்கின்றனர் என்று அறிவித்தனர்.

இந்த நிலையிலேயே சுதந்திரக் கட்சி ரணிலையே ஆதரிக்கின்றது என்று இராஜாங்க அமைச்சர் மீண்டும் அறிவித்தார். இது தொடர்பில் அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:

எமது கட்சியின் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் செயலாளர் நாயகம் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட கட்சியின் அதிகாரிகள் மட்டுமன்றி சு.கவை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்திற்குத் தெரிவான 14 உறுப்பினர்களில் 8 உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்திற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு கட்சியின் அகில இலங்கை நிறைவேற்று சபையிலுள்ள 90 சதவீதமானவர்களின் உடன்பாட்டுடன் இந்த முடிவு எடுக்கப்பட்டது. எனவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பலமான ஏற்பாட்டு வலையமைப்பு தற்போதே தீவிரமாக செயற்பட ஆரம்பித்துள்ளது என்றார்.

## விஜயதாச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜினாமா செய்தார்.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்காத ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்க்கட்சி ஆசனங்களை வழங்குவதற்கு எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என நாடாளுமன்ற அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, தமக்கு எதிர்க்கட்சி ஆசனம் வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுக்கவுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதித் தேர்தல் குறித்து போலித் தகவல்கள் பரவல்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களுக்கு நாட்டில் உள்ள எந்தவொரு தேர்தல் வாக்கெடுப்பு நிலையத்திலிருந்தும் வாக்களிக்க முடியும் என சமூக ஊடகங்களில் பரவும் தகவல்கள் போலியானவை என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்கள் தங்களது மாவட்டத்திற்குரிய தேர்தல் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வதன் மூலமும், தபால் மூலம் வாக்களிக்கவுள்ளோர் தங்களது மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரின் முன்னிலையில் வாக்களிப்பதன் மூலமும் தேர்தல் சட்டத்தின்படி வாக்குகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் முகவரிக்கு (வாக்காளரின் பெயர், வாக்கெடுப்பு நிலையம், தேர்தல் நடைபெறும் திகதி, நேரம்) என்பன அடங்கிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் தபால் மூலம் விநியோகிக்கப்படும்.

எனவே, தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வெளியீடு இன்றி சமூக ஊடகங்களில் பகிரப்படும் தகவல்கள் அனைத்தும் போலியானவை என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு சென்ற இளைஞன் மீது கொடூரமாகத் தாக்குதல்

அராலி பகுதியில் சனிக்கிழமை நடைபெற்ற பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய இளைஞனை மறித்து கும்பல் ஒன்று வாளை காட்டி மிரட்டியதுடன் கம்பிகளால் தாக்குதலும் நடாத்தியுள்ளது.

குறித்த இளைஞன் படுகாயம் அடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில் –

சாவகச்சேரியை சேர்ந்த குறித்த இளைஞனும் அவரது நண்பர்களும் ஹையேஸ் வாகனத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை, இடையே மறைத்து வாளுடன் வந்த கும்பல் ஒன்று குறித்த இளைஞனை வெளியே இழுத்து மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்நிலையில் காயமடைந்த இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றார்.

குறித்த இளைஞன் அராலியை சேர்ந்த யுவதி ஒருவரை காதலித்து வந்தார். இந்தக் காதலுக்கு யுவதியின் தாயாரும் ஆரம்பத்தில் பச்சைக்கொடி காட்டியுள்ளார். அந்த யுவதி கடந்த நான்காம் மாதம் முதல் இளைஞனுடனான தொடர்பை துண்டித்துள்ளார். இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை அராலி பகுதிக்கு குறித்த இளைஞன் வந்தவேளை, யுவதியின் தந்தை, தந்தையின் சகோதரர்கள், யுவதியின் சகோதரர் மற்றும் உறவினர்களால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (05)

# 5 கடைகளையும் கோவில் உண்டியலையும் உடைத்துத் திருடிய இரண்டு பேர் கைது

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் ஐந்து கடைகளையும் கோவிலையும் உடைத்துத் திருடிய குற்றச்சாட்டில் இருவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கடைகள், ஆலய உண்டியல் உடைத்து திருடப்பட்ட சம்பவங்கள் அண்மைய நாள்களாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள ஒரு கடை, வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள ஒரு கடை , மந்துவில்லில் உள்ள ஒரு கடை, காமன்ஸ் அருகே ஒரு கடை, செம்மண்குன்றில் ஒரு கடை என ஐந்து கடைகளும் புதுக்குடியிருப்பு நாகதம்பிரான் ஆலயத்தின் உண்டியலும் உடைக்கப்பட்டு பணமும் பொருள்களும் திருடப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹெரத் தலைமையிலான பொலிஸார் குறித்த கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து திருடப்பட்ட 46,230 பணமும், திருடப்பட்ட பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரம் பகுதியை சேர்ந்த 14 வயதுடைய சிறுவனும், மந்துவில்லை சேர்ந்த 24 வயதுடைய இளைஞனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இவ்வாறான திருட்டு சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால் மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால், புதுக்குடியிருப்பு பொலிஸார் புதுக்குடியிருப்பு பகுதிகளில் பாதுகாப்பை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கற்பிட்டியில் இடம்பெற்ற ஐ.ம.சக்தியின் வெற்றியை உறுதிப்படுத்தும் கூட்டம்




(எம் சியாஜ்)

கற்பிட்டியில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் வெற்றியை உறுதிப்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கற்பிட்டி பிரதேச சபையின் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற வேட்பாளருமான ஏ.ஆர்.எம் முஸம்மில் தலைமையில் அவரின் இல்லத்தில் அன்மையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தியின் கற்பிட்டி நகர அமைப்பாளர் எம்.எப்.எம் றில்மியாஸ் , சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் கற்பிட்டி அமைப்பாளர் எம்.எச்.எம் ஹில்மி ஐக்கிய மக்கள் சக்தியின் கற்பிட்டி பிரதேச மகளீர் பிரிவின் செயலாளர் கே. கலைச் செல்வி , கற்பிட்டி பிரதேச பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், வர்த்தகர்கள் மீனவர்கள் , மௌலவிமார் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் வெற்றியை கற்பிட்டி பிரதேசத்தில் உறுதிப்படுத்துவது பற்றியும் அதற்கான வேலைத்திட்டம் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)



## உலக மக்களின் நன்மைகருதி இ.கி.மிஷன் கல்லடியில் வழிபாடு



(வி.ரி. சகாதேவராஜா)

உலக மக்கள் நன்மை கருதி இராமகிருஷ்ணமிஷன்மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் கல்லடியில் சிறப்பு பிரார்த்தனையும் வழிபாடும் நடைபெற்றது.





மட்டக்களப்பு கல்லடி அருள்மிகு ஸ்ரீபேச்சியம்மன் திருச்சடங்கு பூஜைகளின் முதல் நாள் பூஜையின் போது இவ்வழிபாடு உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுராச்சி தானந்தா ஜீ மகராஜ் தலைமையில் நடைபெற்றது.

பாரம்பரிய முறைப்படி முதல் பூஜையை ராமகிருஷ்ணபுரம், ராமகிருஷ்ணமிஷன் துறவியர்களும் பக்தர்களும் மாணவர்களும் மேளதாளம் முழங்க கோவிலுக்கு சென்று வழிபாடுகளை நடத்தினர்.

அவர்கள் உலக மக்களுக்காகப் பிரார்த்தனை செய்து வழிபட்டனர். (05)

## கஜ முத்துக்களுடன் ஆசிரியை உள்ளிட்ட நால்வர் கைது

திஸ்ஸமஹாராம பகுதியில் விலை மதிப்பற்ற இரண்டு கஜ முத்துக்களை வைத்திருந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என திஸ்ஸமஹாராம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நால்வரில் வெல்லவாய பிரதேசத்தை சேர்ந்த பாடசாலை ஆசிரியையும் காணப்படுகிறார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மற்றைய மூவரும் புத்தல, வெல்லவாய மற்றும் கல்கமுவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் கஜமுத்துக்களை விற்பனை செய்வதற்காக திஸ்ஸமஹாராம பிரதேசத்திற்கு வருகை தந்த போது கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், சந்தேகநபர்கள் திஸ்ஸமஹாராம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவிருந்த நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திஸ்ஸமஹாராம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)



# இலாபம் அடைய வேண்டும் என்பதற்காக நான் அரசியலுக்குள் வந்தவன் அல்லன்

## முன்னாள் மாநகர சபை உறுப்பினர் ஹாரிஸ் நவாஸ் தெரிவிப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அரசியல் ஊடாக இலாபம் அடைய வேண்டும் அல்லது உழைத்து சொத்துக்களை தேட வேண்டும் என்பதற்காக அரசியலுக்கு வந்தவன் நான் அல்லன். நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னரே பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள் என்று பல சமூக சேவைகளை செய்து வந்திருக்கிறேன். மத்ரஸா மானவர்களின் மத்ரஸா கல்வியை ஊக்கப்படுத்துவதற்கு நாம் முன்னின்று செயற்பட வேண்டும். என கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எஸ். நவாஸ் ஹாரிஸ் தெரிவித்தார்.

மருதமுனை நூறானியா பள்ளிவாசலில் இயங்கி வரும் மத்ரஸா மாணவர்களுடைய ஆண்டு நிறைவு மற்றும் பரிசளிப்பு நிகழ்வு என்பன ஞாயிற்றுக்கிழமை பள்ளிவாசலில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மாநகர சபை உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றும் போது -

அரசியலில் இருக்கும் போது தான் சிலரை சமூகத்தில் காணலாம். ஆனால் நான் அரசியல் அதிகாரத்துக்கு வருகின்ற பொழுதும் அரசியலில் இருந்த பொழுதும் இப்பொழுது அதிகாரம் இல்லாமல் இருக்கும் போதும் ஏராளமான சமூக சேவைகளை செய்து கொண்டு வருகிறேன். முன்பள்ளி மாணவர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் இது போன்ற மத்ரஸா மாணவர்களுக்கும் என்னால் முடியுமான பல பணிகளை செய்திருக்கிறேன். எனது வட்டாரம் தவிர்ந்த யாரெல்லாம் வந்து என்னிடம் உதவி கோருகிறார்களோ அவர்களுக்கெல்லாம் என்னால் முடிந்த பங்களிப்பை செய்து வருகிறேன். பல வீதிகளுக்கு தெருவிளக்குகளை எனது சொந்த நிதியிலிருந்து செலவு செய்திருக்கிறேன். சமூக அமைப்புகளுக்கு எனது சொந்த நிதியில் சமூக சேவையாக கருதி அவற்றை செய்திருக்கிறேன். இவைகளை மக்கள் மத்தியில் பட்டியலிட்டு காட்டுவதற்கு அல்லது அரசியல் ஊடாக நான் செய்த பணிகளை சொல்லி காட்டுவதற்கு நான் ஒருபோதும் விரும்புவது கிடையாது. மக்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும் பாதிக்கப்பட்டவர்கள், நலிவுற்றவர்களுக்கு வசதியாக இருக்கின்றவர்கள் செய்ய வேண்டியது ஒரு சமூகப் பொறுப்பாகவும் கடமையாகவும் பார்க்கின்றேன். நான் செய்யும் சமூகப் பணிகளுக்கு மேலாக இன்னொரு படி உயர்ந்து செய்வதற்கு அரசியல் அதிகாரம் எனக்கு பக்கபலமாக இருந்திருக்கிறது. அதனால் தான் நான் அரசியலில் ஈடுபட்டேன். மாணவர்களை உதவி செய்கின்ற கூட்டங்களுக்கு வந்து கூட நான் அரசியல் பற்றி பேசுவது கிடையாது.

நமது பிரதேசத்தின் மத்ரஸா மாணவர்களுடைய கல்வியை நாம் ஊக்கப்படுத்த வேண்டும். இன்று மார்க்க கல்விக்கு கொடுக்கின்ற முக்கியத்துவம் குறைந்து செல்கிறது உலக கல்விக்காக ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து நமது பிள்ளைகளை கற்பிக்கிறோம். ஆனால் மறுமை வாழ்வுக்கு தேவையான அல்குர்ஆனை போதிக்கின்ற கற்பிக்கின்ற நிலையங்களுக்கு நாம் எவ்வாறு உதவி செய்கின்றோம்? மத்ரஸா கல்வியை கற்பதற்கு மாணவர்களை நாம் எவ்வாறு தயார் படுத்தி அனுப்புகிறோம்? என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. அது வீழ்ச்சி அடைந்து கொண்டு செல்கிறது. எனவே இதனை ஊக்கப்படுத்த வேண்டியது ஒரு சமூக பொறுப்பாகும். இன்று மருதமுனை நூறானியா மத்ரஸா மாணவர்களுடைய ஆற்றலை, திறமையை கண்டு நான் பாராட்டுகிறேன். இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய எல்லோருக்கும் இறைவனுடைய பேரருள் உண்டு என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மருதமுனை ஜம்இய்யதுல் உலமா சபை தலைவர் அஷ்செய்க் எப்.எம். அகமது அன்சார் மௌலானா பள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மத்ரஸா முஅல்லிமா உட்பட பலர் கலந்து கொண்டனர்.(05)



# வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சிறுதானிய விதைகள் வழங்கி வைப்பு





(எம்.எப்.றிபாஸ்)

விவசாய அமைச்சால், கிராமிய மக்களின்வாழ்வாதாரத்தைமேம்படுத்தும் நோக்கில்நடைமுறைப்படுத்தப்படும்பயறு மற்றும் உழுந்து பயிர்ச் செய்கைக்கான திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பாசிப்பயறு, உழுந்து போன்ற விதைகள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் பீ.ரீ.எம்.இர்பான் தலைமையில் இடம்பெற்ற

இந்நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் கே.பி.சலீம் , உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எல்.ஏ.மஜீட், விவசாய போதனாசிரியர்கள், பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரிவுக்கு பொறுப்பான பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் உட்பட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(05)

# திருமலை எம்.பி. குகதாசனுடன் மக்களைச் சந்தித்த ஜனாதிபதி



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மக்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. குறித்த சந்திப்பு திருகோணமலை நகராட்சி மன்ற பிரதான



மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்றது.

இதன் போது வரலாற்று சிறப்பு மிக்க திருக்கோணேஸ்வர ஆலய விவகாரம், மக்களுடைய காணிகள் விடுவிப்பு, மக்கெய்சர் விளையாட்டு அரங்கு தொடர்பான பல பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

அத்துடன் இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்



சண்முகம் குகதாசன் மற்றும் அரசியல் பிரமுகர்கள் உட்பட 400 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். (05)

# விளையாட்டு கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கல்



(எச் எம் ஹலால்தீன் )

கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கான விளையாட்டுஉபகரணங்கள்வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கே இவ்வாறு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம் எச் முகம்மது கனி தலைமையில் கீழ் கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வைத்து இவை வழங்கபட்டன.

இதன்போது பிரதேசசெயலகத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயல அதிகாரிகள், விளையாட்டு அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் உட்படப்பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு உபகரணங்களைப் பெற்றுக்கொண்டனர்.

(05)

# சைக்கிள் தரிப்பிடம் திறப்பு விழா நிகழ்வு





(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையில் சைக்கிள் தரிப்பிடம் நேற்று (திங்கட்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

அந்நூர் தேசிய பாடசாலையின் 91- க.பொ.த.சாதாரண தர நண்பர்கள் வட்டத்தின் நிதிப் பங்களிப்பில் நிர்மாணிக் கப்பட்ட சைக்கிள் தரிப்பிடமே வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களின் நலன்கருதி சுமார் பன்னிரெண்டு லட்சம் ரூபா நிதிப் பங்களிப்பில் இந்த சைக்கிள் தரிப்பிடம் நண்பர்கள் வட்டத்தால் நிர்மாணிக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபர் எம்.பீ.அன்வர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிதியாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.எம்.தாஹிர், 91- க.பொ.த.சாதாரணதர நண்பர்கள் வட்ட உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.(05)

# தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புக்கு நிதி உதவி





(பி.கேதீஸ்)

பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் அவர்களின் வாழ்வாதார பிரச்சனைகளுக்கான பொருளாதார ரீதியான தீர்வுகளை பெற்றுக்கொள்ள மற்றும் பெண்தலைமைத்துவ சிறு வியாபாரங்களை ஊக்குவித்தல் எனும் கருப்பொருளில் 'விழித்தெழு பெண்ணே' கனடா அமைப்பால் தெரிவு செய்யப்பட்ட 30 பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புகளாக காளான் வளர்ப்பு மற்றும் சந்தைப் படுத்தலுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் இணைப்பு செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ், இந்நிகழ்வுக்கான செயற்திட்ட அதிகாரி செல்வி கனிஷ்டா மைக்கல் ஆகியோர் கலந்துகொண்டு காசோலைகளை வழங்கி வைத்தனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.08.2024இல் வெளியிடப்பெற்றது